**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 31/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. நீலகண்டன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ஆறுமுகம்** | **Calling** | : | |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **53** |
| | | | **Dated** | : | **30.07.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**Accused present.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. நீலகண்டன்**ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சின்னாளபட்டி மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அசா. 1 எனது அக்கா மகள் ஆவார். ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். சுமார் 1 வருடத்திற்கு முன்பு நான் எனது வேலையை முடித்துவிட்டு சின்னாளபட்டியில் இருந்து அக்னி லிங்கேஸ்வரர் கோவில் அருகே வரும்போது சுமார் மதியம் 02.30 – 03.00 மணியளவில், ஆஜர் எதிரி என்னை வழிமறித்து என்னை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி உன்னை கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்து, அதன் பின் அவர் மறைத்து வைத்து இருந்த இரண்டு கத்திகளாலும் குத்தினார். அதில் எனக்கு இடது தோள்பட்டை, நெஞ்சு, முதுகு பின்புறம், தலை மற்றும் வலது கை ஆகிய இடங்களில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டது.**

காயம் ஏற்பட்டவுடன் நான் மயங்கி கீழே விழுந்து விட்டேன். அதன் பின் அக்கம் பக்கம் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் என்னை சிகிச்சையில் சேர்த்தார்கள். அங்கு நான் உள்நோயாளியாக 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்த பொழுது, அங்கு வந்த தாலுகா போலீசாரிடம் எனது அக்கா மகள் சுபாஷினி புகார் மனு கொடுத்துள்ளார். ஆஜர் எதிரி தான் சம்பவத்தன்று என்னை கத்தியால் குத்தியவர் ஆவார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் இரண்டு கத்திகளால் (சா.பொ. 1 மற்றும் சா.பொ. 2) தான் எதிரி சம்பவத்தன்று என்னை மாறி மாறி குத்திய கத்தி ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் போலீசார் விசாரிக்கவில்லை. சுபாஷினி, ஷரயாஸ் ஆகியோர்கள் எனது உறவினர்கள். நான் எந்த முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்ற ஆவணத்தை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால், கேட்காததால் கொடுக்கவில்லை. நான் சின்னாளபட்டி மருத்துவமனையில் வேலை பார்ப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. சம்பவம் நடந்த அன்று நான் வேலைக்கு செல்லவில்லை என்றால், பணியில் இருந்துதான் முன் அனுமதி பெற்று திரும்பிக் கொண்டு இருந்தேன். முன் அனுமதி பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்காததால் நான் கொடுக்கவில்லை. எனக்கு சட்டப்பூர்வ மனைவி மற்றும் குழந்தைகள் உண்டு. நான் சம்பவத்தன்று வேலை சென்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், கேட்காததால் கொடுக்கவில்லை. கேட்டால் தாக்கல் செய்ய

தயாராக உள்ளேன். சம்பவத்தின்போது, அங்கு பொதுமக்கள் இல்லை என்றால் இருந்தார்கள். அங்கு யார் யார் இருந்தார்கள் என்று நான் சொல்லவில்லை என்றால், அந்த சூழ்நிலையில் என்னால் சரிவர கவனிக்க முடியவில்லை. சம்பவ இடத்தின் வழியாக வெள்ளோடு செல்ல பாதை உள்ளது என்றால், அது மண் பாதை, மெயின் ரோடு தனியாக உள்ளது. சம்பவ இடத்திற்கு எதிரி எப்படி, எந்த வாகனத்தில் வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், பைக்கில் அவர் உட்கார்ந்து இருந்தார். அந்த வாகனத்தில் பதிவு எண் எனக்கு தெரியாது. எதிரி ஆயுதத்தை எங்கு இருந்து எடுத்தார் என்றால், என்னை வழிமறித்து ஓடிச் சென்று பைக்கில் இருந்து எடுத்து வந்தார். பைக்கில் இருந்து ஆயுதத்தை எடுத்து வந்ததாக முதல் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவத்தின்போது நான் அணிந்து இருந்த சட்டையை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால், நான் மயக்க நிலையில் இருந்ததால் அந்த சட்டை என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. எதிரி பயன்படுத்திய ஆயுதத்தின் வடிவம், நிறம் ஆகியவற்றை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பெண்களால் எனக்கு முன் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. நான் கடந்த 2009 ல் இருந்து என் மனைவியை பிரிந்து வாழ்கிறேன். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும், சம்பவத்திற்கு முன்பு எந்த முன் விரோதமும் இல்லை என்றால் சரிதான். நான் வாகனத்தில் செல்லும்போது, நிலை தடுமாறி கூர்மையான பொருட்கள் மீது விழுந்ததால் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து எதிரிக்கு விரோதமாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  அசா. 1 மற்றும் ஷிரயாஸ் துண்டுதலின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2025.07.30 18:16:29 +0530